என்றால், அந்த ஊர்க்காரர்கள் 10 சென்ட் காலி மனை அரசுக்கு பத்திரம் செய்து தரவேண்டும். 400 சதுர அடி வாடகை இல்லாமல் கட்டிடம் தரவேண்டும். ரூபாய் 20 ஆயிரம் ரொக்கம் மற்றும் தளவாடங்கள் தரவேண்டும். ஆயிரம் உறுப்பினர்களாவது சேர்க்கப்படவேண்டும். இவற்றை பொது மக்கள் நிறைவேற்றித் தர முன் வந்தால் கிளை நூலகம் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 35 திரு.வீ. சுப்பிரமணியன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

35—

விக்ரவாண்டி பேரூராட்சியில் பேருந்து நிலையம்

*10584—திரு.வீ.சுப்பிரமணியன் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விக்ரவாண்டி பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. வீ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை என்ற சொல்லுக்கே இடமில்லை என்ற பொன்னான ஆட்சி நடத்துகின்ற இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். விக்கிரவாண்டி பேரூராட்சி தேர்வு நிலைப் பேரூராட்சியாக இருக்கின்ற காரணத்தினாலேயும், அங்கே பேருந்து நிலையம் அமைப்பதற்கு வேண்டிய இடவசதி இருப்பதாலும், நடப்பாண்டில் இல்லாவிட்டாலும், அடுத்த ஆண்டிலாவது பேருந்து நிலையத்தை அமைக்க மாண்புமிகு இதய தெய்வத்தினுடைய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 27]

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம், ராமசாமி படையாச்சியார் மாவட்டம், விக்கிரவாண்டி பேரூராட்சியில் பேருந்து நிலையம் கட்ட சொந்தமான இடம் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்திருக்கிறார். அப்படி சொந்தமாக இடவசதி இருக்கின்றபட்சத்தில், இந்தத் திட்டம் பயன்தக்கதாய் அமையபெறும் என்றால் மாவட்ட ஆட்சியர் அவர்களுடைய பரிந்துரையின்பேரில், நகர் ஊரமைப்பு இயக்குநரின் மூலம் இதை பரிசீலனை செய்யவேண்டிய நிலை இருக்கிறது. அந்த அளவிலே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கடன் உதவி வழங்கி, நகர ஊரமைப்பு இயக்குநர் அவர்களுடைய ஒப்புதல் பெறப்பட்டு பிறகுதான் இத்திட்டத்தை செயல்படுத்த முடியும். அரசு இதைப் பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 36, திருமதி ப. சரஸ்வதி, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

36—

இடையாறு அருந்ததியர் இடுகாட்டு பாதை ஆக்கிரமிப்பை

*1010—திருமதி ப. சரஸ்வதி :

மாண்புமிகு ஆதிதிராவிடர்நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமத்தி வேலூர் தாலுகா, நன்செய் இடையாறு கிராம அருந்ததியர் இடுகாட்டிற்குச் செல்லும் பாதை ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதை மீட்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பரமத்தி வேலூர் வட்டம், நன்செய் இடையார் கிராமம் ச. நெ. 58/2, 53/2, 33/4, 34/3 மற்றும் இடும்பன்குளம் கிராமம் ச.நெ. 428/3, 449 ஆகிய